செய்தி வெளியீட்டு எண்.07 நாள்.10.01.2024

## செய்தி வெளியீடு

## மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட தொழில் நிறுவனங்களுக்கு கடனுதவி விழிப்புணர்வு முகாம்

### 10.01.2024 முதல் 13.01.2024 வரை நடத்தப்படுகிறது

மிக்ஜாம் புயலின் தாக்குதல் காரணமாக சமீபத்தில் பெய்த பெருமழை மற்றும் வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் மறு சீரமைப்பிற்கான நிதியுதவியினை தமிழக அரசின் ஆணைக்கு இணங்க தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தின் சார்பில் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதி உதவி புயல் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட உற்பத்தி மற்றும் சேவை துறையில் உள்ள நிறுவனங்களுக்கு மட்டும் வழங்கப்படும். இந்த திட்டத்தின் மூலம் குறைந்தபட்ச நிதி உதவியாக ரூபாய் ஒரு லட்சமும் அதிகபட்ச நிதி உதவியாக ரூபாய் மூன்று லட்சமும் 6% வட்டியில் வழங்கப்படும். நிதி உதவி பெற, கடந்த 30.09.2023 அன்று நிறுவனம் நடைமுறையில் இருந்திட வேண்டும். நிறுவனங்களின் மூலதனம் மற்றும் பிணைய சொத்து ஏதுமில்லை. கடந்த 01.04.2023 முதல் 30.09.2023 வரை உள்ள அரையாண்டு வருமானத்தில் ஜி.எஸ்.டி ஆர் ரிட்டன்ஸ் அல்லது CA சான்றிதழ் உடன் UDIN படி 20 சதவீதம் வரை கடனாக அதிகபட்சம் ரூபாய் மூன்று லட்சம் வழங்கப்படும். முதல் மூன்று மாதங்கள் வட்டி மட்டும் செலுத்த வேண்டும் நான்காவது மாதம் முதல் 21ஆவது மாதம் வரை பிரதி மாத அசல் தவணையுடன் சேர்ந்து வட்டி செலுத்திட வேண்டும் இத்திட்டம் வருகின்ற 31.01.2024 வரை நடைமுறையில் இருக்கும். இது சார்பாக மாவட்ட தொழில் மையத்துடன் இணைந்து விழிப்பு விழிப்புணர்வு முகாம் தொடர்ந்து நான்கு நாட்களுக்கு கீழ்கண்டவாறு நடைபெற உள்ளது:

| இடம் | தேதி | நேரம் |
|---|---|---|
| The Conference Hall, II/9, Dr. VSI Estate, Phase I (EIRFIV Electronics Pvt. Ltd.) | 10.01.2024 | 11.00 am – 1.00 pm |
| RV Towers, 2nd Floor, KVK Hall No.10, GST Road, Chennai–32 | 11.01.2024 | 11.00 am – 1.00 pm |
| AIEMA, Ambattur | 12.01.2024 | 11.00 am – 1.00 pm |
| F1, Commercial Complex, EH Road, Vyasarpadi, Chennai – 39 | 13.01.2024 | 11.00 am – 1.00 pm |

எனவே இந்த சிறப்பு நிதியுதவி முகாமினை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட தொழில் முனைவோர் அனைவரும், பங்குபெற்று பயனடையுமாறு சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே, இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

**வெளியீடு:**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**சென்னை–01.**